*அல்லாவின் பெயரால், மிகவும் நலன் பயப்பவர், மிகுந்த கருணையுள்ளம் கொண்டவர்*

*சிறந்த நடத்தைக்கு உங்களிடையே பரஸ்பர போட்டியை ஊக்குவிப்பதற்கு சொர்க்கத்தையும் புவியையும் உருவாக்கியவர் அவரே.*

இந்திய ஹஜ் நிதி™

(இந்திய ஜகத் அறக்கட்டளையின் ஒரு நிறுவனம் – பதிவுசெய்யப்பட்ட அறக்கட்டளை)

எந்தச் சமயத்திலும் உலகிலுள்ள *அனைத்து* முஸ்லிம்களும் ஹாஜிக்களாக இருந்ததில்லை. எப்பொழுதுமே குறிப்பிட்ட ஒரு சிலர் மட்டுமே ஹஜ் பயணம் மேற்கொள்கிறார்கள். அது அல்லாவின் விதிப்படி நடக்கின்றது. 'தேர்ந்தெடுக்கப்பட்ட சிலரில்' நீங்களும் ஒருவராக இருக்க வேண்டும் என நீங்கள் ஆக்கப்பூர்வமாக ஆசைப்படக்கூடும்.

**ஹஜ் பயணத்துக்காக சேமிப்பதற்கான உங்களுடைய அடிப்படை மத தேவையைப் பூர்த்தி செய்வதற்கும், சமயப் பற்றுள்ள ரிபா-சாராத பாதுகாப்பில் இந்த சேமிப்புகளைப் பாதுகாக்கவும் HFI பாடுபடுகின்றது.**

ஒவ்வொரு வருடமும் ஹஜ் செலவுகள் அதிகரித்துக்கொண்டு செல்கின்றன. சராசரியாக, ஒரு முஸ்லிம் ஹஜ் பயணத்துக்காக சேமிப்பதற்கு ஏழு முதல் எட்டு வருடங்கள் ஆகின்றது. இந்தக் காலகட்டத்தின்போது, இந்திய முஸ்லிம்களாகிய நாம் பெரும்பாலும் ஒழுங்குமுறையற்ற மற்றும் பாரம்பரிய முறையில் பணத்தைச் சேமிக்கின்றோம். படுக்கை அல்லது தலையணைக்கு அடியில், பானையில் அல்லது வங்கிப் பெட்டகத்தில் பணம் வைத்திருப்பது பாதுகாப்பானது மட்டுமல்லாது, அத்தகைய சேமிப்பு முறைகள் ரிபா சாராதவையுமாகும் என நம்மில் பலர் நம்புகிறோம்.

ஷரியா சட்டத்தில் தடை செய்யப்பட்டுள்ள வட்டி அடிப்படையிலான வணிக நடவடிக்கைகளுக்கு நம்முடைய சமயப் பற்றுமிக்க சேமிப்புகள் பயன்படுத்தப்படாமல் இருப்பதை உறுதி செய்வதற்காக, நம்மில் பலர் இந்தச் சேமிப்புகளை பாரம்பரிய வங்கி அமைப்பில் வைக்க விரும்புவதில்லை. எனினும், நவீன காலத்தில், வங்கியைத் தவிர வேறொரு இடத்தில் சேமிப்புகளுக்கான பாதுகாப்புக்கு முழுமையான உத்தரவாதம் இல்லை. இது ஒரு முரண்பாடாக உள்ளது.

**ஹஜ் சேமிப்புகள் சமூக மேம்பாட்டுக்காக அர்ப்பணிக்கப்படுகின்றன.**

ஹஜ் பயணத்துக்காகச் சேமிக்கப்பட்ட தனிநபர்களின் தொகைகளை நாம் சேர்த்தால், பெருமளவு பணம் தேக்க நிலையில் இருப்பதையும், எந்த ஒரு பொருளாதார நடவடிக்கையிலும் பயன்படுத்தப்படாமல் இருப்பதையும் நாம் காண்கிறோம். இது இஸ்லாமியக் கொள்கைக்கு எதிரானதாகும். மேலும், ஹஜ் பயணத்துக்காகப் பணம் திரட்டுவதற்காக நிலம் மற்றும் சொத்துக்களை விற்கும் நடைமுறையும் உள்ளது. மீண்டும் இது தனிநபர்களின் அல்லது மில்லட்டின் பொருளாதார வளர்ச்சியில் பங்களிப்பது இல்லை.

**இந்திய ஹஜ் நிதி நீங்கள் ஹஜ் பயணத்துக்காகச் சேமிக்கும்போது உங்களுடைய *சவாபை* மேம்படுத்தக்கூடிய ஒரு முறையில் இந்தப் பிரச்சினைக்கு ஒரு பொருத்தமான தீர்வுடன் வந்துள்ளது.** இது சமயப் பற்றுள்ள நோக்கத்துக்கான உங்களுடைய சேமிப்புகளை பாதுகாப்பாக வைப்பதை எளிதாக்கக்கூடிய ஒரு சேவை முகமையாகச் செயல்படுகின்றது. இந்தச் சேவை சட்ட ஆய்வில் வெற்றி பெற்றுள்ளது.

எந்த இந்திய முஸ்லிமும் HFI உடன் அவருடைய ஹஜ் கணக்கைத் துவங்க முடியும். 1,000, 2,000, 3,000, 4,000, 5,000,...... என்பன போன்ற ஆயிரத்தின் மடங்குகளில் எந்தச் சமயத்திலும் இந்த ஹஜ் கணக்கில்

பணம் போட முடியும். அதிகபட்ச வரம்பு எதுவும் இல்லை. உங்களுடைய விருப்பப்படி எத்தனை தவணைகளில் வேண்டுமானாலும் நீங்கள் பணம் போட முடியும், மற்றும் உங்களுடைய வசதிக்கேற்ப எந்தச் சமயத்திலும் நீங்கள் பணம் போட முடியும்.

**இந்திய ஹஜ் நிதியில் பணம் செலுத்துதல்**

"HAJ FUND OF INDIA ACCOUNT NO. 603020110000239, BANK OF INDIA" என்ற பெயரில் வங்கி வரைவோலையாகவோ, அல்லது “A/C Payee”காசோலையாகவோ இந்தியாவில் உள்ள எந்த ஒரு பேங்க் ஆஃப் இந்தியா வங்கிக் கிளையிலும் நீங்கள் பணம் செலுத்த முடியும்.

வரைவோலையின் / காசோலையின் பின்புறத்தில் நீங்கள் உங்களுடைய முழுப் பெயர், முகவரி மற்றும் தொலைபேசி எண் மற்றும் இதர விவரங்களை நீங்கள் எழுத வேண்டும். தயவுசெய்து வரைவோலையின் / காசோலையின் இரண்டு நகல்களை வைத்துக்கொள்ளவும். அவ்வாறு செய்தபின், தயவுசெய்து கணக்கு தொடங்குவதற்கான படிவத்தை (HFI-A) பூர்த்தி செய்து, அதை உங்களுடைய வரைவோலை அல்லது காசோலையுடன் சேர்த்து விரைவு அஞ்சல் அல்லது பதிவு அஞ்சல் வாயிலாக பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்: **CEO, இந்திய ஹஜ் நிதி, CISRS ஹௌஸ், 14 ஜங்புரா B, மதுரா சாலை, புது தில்லி 110014.**

**இந்திய ஹஜ் நிதியிலிருந்து பணமெடுத்தல்:**

நீங்கள் ஹஜ் பயணத்தை மேற்கொள்ளும்போது உங்களுடைய கணக்கிலிருந்து பணமெடுப்பதைப் பொறுத்தவரை, அது மிகவும் எளிதானதாகும்.

நீங்கள் அஞ்சல் மூலமோ அல்லது நேரடியாகவோ படிவம் HFI-B இல் எங்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும். நாங்கள் உங்களுடைய பெயரிலோ அல்லது ஹஜ் குழுவின் பெயரிலோ அல்லது உங்களுடைய பயண முகவரின் பெயரிலோ காசோலை அல்லது வழங்காணை (பே ஆர்டர்) வழங்குவோம். அது உங்களுடைய விருப்பத்துக்குட்பட்டதாகும். அது உங்களுக்கு விரைவு அஞ்சலிலோ அல்லது பதிவு அஞ்சலிலோ அனுப்பி வைக்கப்படும், அல்லது நீங்கள் அதை நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

**சமுதாய நலனுக்காக இந்திய ஹஜ் நிதியைப் பயன்படுத்துதல்:**

**HFI** நிதி விஷயங்களில் ஆலோசனை வழங்கி மேற்பார்வை செய்யக்கூடிய **ஷரியா ஆலோசனை சபை** ஒன்றைக் கொண்டுள்ளது, (முழுமையான பட்டியலைப் பார்க்கவும்). அது ஷரியா வழிகாட்டுதல்களுக்குப் பொருத்தமான பன்முக முதலீட்டுத் திட்டங்களை இலக்காகக் கொண்டுள்ளது.

இந்திய ஹஜ் நிதியின் சிறிதளவு பகுதி ஏழை முஸ்லிம்களுக்கு குறுகியகால சிறுகடன் வழங்குவதற்கு பயன்படுத்தப்படுகின்றது. எடுத்துக்காட்டாக, ஒரு ரிக்ஷா இழுப்பவர் ரிக்ஷா வாங்குகிறார் (தினமும் உரிமையாளருக்கு ரிக்ஷா வாடகை கொடுப்பதற்கு பதிலாக). ஆறு மாத காலத்துக்குள் அவருடைய சேமிப்பிலிருந்து அவர் இந்திய ஹஜ் நிதிக்கு கடனைத் திருப்பிச் செலுத்துகிறார் (வட்டி இல்லாமல்).

எனவே, ரிக்ஷா இழுப்பவரை பொருளாதார ரீதியாக மேம்படுத்திய பிறகு ஆறு மாதத்துக்குள் கடன் தொகை திரும்பவும் கட்டி முடிக்கப்படுகின்றது.

மேலும், வைப்புத் தொகைகளைக் கொண்டு, வைப்பீட்டாளர்கள் சார்பாக HFI தன்னுடைய தாய் நிறுவனமாகிய இந்திய ஜகத் அறக்கட்டளைக்கு ஜகத் கட்டணத்தைச் செலுத்துகின்றது.

வைப்பீட்டாளர்களின் கணக்கிலிருந்து வசூலிக்கப்படும் ஜகத் தொகை வாயிலாக HFI குறிப்பிடத்தக்க சமூக சேவைகள் செய்வது குறித்து கணக்கு வைத்திருப்பவர்கள் அதிக திருப்தியடைகிறார்கள். இந்தத் தொகை இந்திய ஜகத் அறக்கட்டளையின் வாயிலாக, குறிப்பிடப்பட்ட குரான் பிரிவுகளின்படி தேவையுள்ளவர்களுக்கு உதவுவதற்காக இந்தத் தொகை பயன்படுத்தப்படுகின்றது.

அந்த வகையில், உங்களுடைய ஹஜ் சேமிப்புகளின் புனிதத் தன்மை அதிகரித்துக்கொண்டு செல்கின்றது, மற்றும் அல்லாவின் கருணையால் நீங்கள் ஹஜ் பயணம் மேற்கொள்வதற்குரிய பெரும் *ஸ்வாப்* பெறுவீர்கள். எவ்வாறாகிலும், ஹஜ் பயணத்தின் மிகச் சிறந்த நோக்கமாகிய "தனிநபரை விட சமுதாயம் மிகவும் முக்கியமானது" எனும் நோக்கம் இதிலிருந்து உங்களுடைய வாழ்க்கையை உயர்ந்த பீடத்தில் வைப்பதற்குப் போதுமான பணியாற்றியுள்ளது.

மேலும், HFI இந்திய முஸ்லிம்கள் இளம் வயதிலேயே சேமிக்கத் தொடங்குவதற்கு ஊக்குவிப்பதன் மூலம், அவர்கள் பெரியவர்களானதும் புனிதப் பயணம் மேற்கொள்வதற்கு உதவுகின்றது. இந்திய முஸ்லிம் சமூகத்தின் அனைத்துப் பாகங்களும் எதிர்காலப் புனிதப் பயணர்களாக ('அஸாம்-இ-ஹஜ்) கணக்கு வைத்திருப்பதில் பெருமையடைகிறார்கள்.

வரலாறு முழுவது, 'ஹஜ் பொருளாதாரம்' வளமைக்கான ஆதாரமாக இருந்து வந்துள்ளது. இன்றைய உலகப் பொருளாதாரத்தில், ஹஜ் பயணத்துடன் தொடர்புடைய திறன்கள் திறமையுடன் ஊக்குவிக்கப்பட்டால், அவை சமுதாய மேம்பாட்டுக்கான ஒரு ஆதாரமாக உருவாகக்கூடும்.

இன்றைய நவீன உலகில் இஸ்லாமிய போதனைகளை எவ்வாறு செயல்படுத்த முடியும் என்பதற்கும், மற்றும் நடைமுறைப்படுத்தப்பட்டவுடன், தனிநபர்களுக்கும் உம்மாவுக்கும் இவை எவ்வளவு பயனுள்ளதாகவும் நன்மையளிப்பதாகவும் இருக்கும் என்பதற்கும் உள்ள பல உதாரணங்களில் HFI ஒன்றாகும்.

ஹஜ் நிதியின் விவரங்கள்:

**உருது:** ஹஜ் நிதியின் கொள்கைகள் இங்கே கிளிக் செய்க இங்கே கிளிக் செய்க>

**ஆங்கிலம்:** ஹஜ் நிதியின் கொள்கைகள் இங்கே கிளிக் செய்க இங்கே கிளிக் செய்க>

இந்திய ஹஜ் நிதி கணக்கை எவ்வாறு தொடங்குவது:

தயவுசெய்து இங்கே > கிடைக்கும் எங்களுடைய 'கணக்கு தொடங்குவதற்கான படிவத்தை' பதிவிறக்கம் செய்து பூர்த்தி செய்யவும். படிவத்தை பூர்த்தி செய்து அதை விரைவு அஞ்சலிலோ அல்லது பதிவு அஞ்சலிலோ பட்டியலிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பவும். உங்களுடைய காசோலை அல்லது வங்கி வரைவோலையை பேங்க் ஆஃப் இந்தியாவின் ஏதேனும் ஒரு கிளையில் செலுத்த வேண்டும். இங்கே கிளிக் செய்து> **அனைத்துக் கிளைகளின் பட்டியலை** நீங்கள் காண முடியும்.

*'இந்திய ஹஜ் நிதி' இந்திய வணிகமுத்திரைச் சட்டத்தின் கீழ் வணிக முத்திரையிடப்பட்டுள்ளது.

உங்களுக்கு உள்ள கேள்விகளை தயவுசெய்து என்ற hajfundofindia@zakatindia.org மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்.

(புதுப்பிக்கப்பட்டது 4/10)

”சமுதாய நலனுக்காகவும், சமயப் பற்றுள்ள ரிபா-சாராத எதிர்கால புனிதப் பயணர்களின் சேமிப்புகளைப் பாதுகாப்பதற்காகவும், இந்திய ஹஜ் நிதி என்ற பெயரில் ஒரு தனி அலகாக செயல்படுவதற்கான யோசனை வழங்கியதற்காக இந்திய ஹஜ் குழு பராட்டுகின்றது...”

”இந்தத் திட்டம் பத்திரிக்கைகள் மற்றும் மின்னணு ஊடகங்கள் வாயிலாக பரந்த அளவில் விளம்பரப்படுத்தப்பட வேண்டும்.”

இந்திய ஹஜ் குழு

(கடிதம் GEN/2010/1055, நாள்: ஏப்ரல் 22, 2010)